கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம்

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2013/2014 (January/February 2018)

# GYS 3143 விவசாயமும் காடாக்கமும் (Agriculture and Forestry)

3 மணித்தியாலங்கள்

தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

இல் இருந்து மூன்று வினாக்களையும் பகுதி II இல் இருந்து இரண்டு வினாக்களையும் செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

அ) விவசாயம் என்பதனை வரையறுக்குக. (03 புள்ளிகள்)

ஆ) விவசாய புவியியல் கற்கையின் அவசியம் பற்றி சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

இ) "விவசாய புவியியல் தரவுகள், கோட்பாடுகள், மாதிரிகள் போன்றவற்றை உள்ளடக்கி வளர்ச்சியடைந்துவரும் துறையாக விளங்குகின்றது." இக்கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீரா? விளக்குக. (12 புள்ளிகள்)

அ) பாரம்பரிய விவசாயம், நவீன விவசாயம் ஆகிய இரு பதங்களையும் வரையறுக்குக. (03 புள்ளிகள்)

ஆ) பாரம்பரிய விவசாயத்திற்கும் நவீன விவசாயத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

இ) நவீன விவசாயமானது பொருளாதார, சூழலியல் சார்ந்த பிரச்சினைகளை ஏற்படுத்துவனவாகவுள்ளது. பொருத்தமான உதாரணங்களுடன் விள்க்குக. (10 புள்ளிகள்)

அ) பின்வரும் பயிர்ச்செய்கை முறைகளை வரையறுக்குக.

i. பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை (Shifting Cultivation)
ii. நாடோடி மந்தை மேய்ப்பு (Nomadic Herding) (2 x 2 = 04 புள்ளிகள்)

ஆ) பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை முறையின் தனித்துவமான பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

இ) பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை மூலம் ஏற்படும் நன்மை, தீமைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

4. அ) வொன்தியூனன் (Von Thunen) தனது விவசாய இடவமைவுக் கோட்பாட்டிற்கா எடுகோள்களைத் தருக. (04 புள்ளிகள்)

ஆ) இரண்டுவகை நிலப்பயன்பாடுகளுடன் தொடர்பான தரவுகள் (கற்பனைசார்) இல் தரப்படுகின்றது. இத்தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு

அட்டவணை I நிலப்பயன்பாட்டுத் தரவுகள்

| ஹெக்ரேயர் ஒன்றிற்கான உள்ளீடு, வெளியீடுகள் | | நிலப்பயன்பாடுகள் | | அல ஒன் விலை |
|---|---|---|---|---|
| | | *நெற்செய்கை* | *மரக்கறிச் செய்கை* | |
| *உள்ளீடுகள்* | ஊழியம் (மனித மணி.) | 60 | 110 | |
| | உரம் (Kg) | 40 | 130 | |
| *வெளியீடுகள்* | உற்பத்தியளவு (Kg) | 1300 | 50 | |
| | சந்தைவிலை (ரூபாய்) | 05 | 60 | |
| ஒரு Km இற்கான போக்குவரத்துச் செலவு | | 0.25 | 0.5 | |

I. இரு நிலப்பயன்பாடுகளுக்குமான உற்பத்திச் செலவு, தூரம், வருமானம் கணிக்குக. (06 புள்ளிகள்)

II. நிலப்பயன்பாடுகளுக்கான எல்லையினைக் கணித்து எல்லை வரைபடத்தில் காட்டி விபரிக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி II

5. விவசாய காடாக்கத்தின் வகைகளைக் குறிப்பிட்டு, அவற்றின் தனித் வரைபடங்களின் துணையுடன் விளக்குக. (20 புள்ளிகள்)

6. "விவசாயத்துறையினை விருத்தி செய்வதில் இலங்கை அரசாங்கம் மேற்கொண் நடவடிக்கைகள்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக. (20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டினிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ) விவசாய நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் பௌதிக காரணிகளின் பங்களிப்பு

ஆ) உலக உணவு நெருக்கடியும் எதிர்கால சவால்களும்

இ) உணவுப் பாதுகாப்பின் அவசியமும் தேவையும்

(2 x 10 = 20 புள்ளிகள்)